தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 169/மா/2026
நாள் 14.10.2026

G. M. சங்கர்,
சென்னை–600 091. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை–600 091, மடிப்பாக்கம், லஷ்மி நகர் மெயின் ரோடு, கதவு எண்.57B, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M.சங்கர் என்பவரின் 15.06.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.06.2026 அன்று பெறப்பட்டு 169/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 091, மடிப்பாக்கம், லஷ்மி நகர் மெயின் ரோடு, கதவு எண்.57B, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M.சங்கர் என்பவர் 15.06.2026 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"(1) கடந்த 01–03–2026 அன்று சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, மடிப்பாக்கம் 188வது வார்டு பகுதியில் அமைந்துள்ள தூய்மை பணியாளர்கள் உணவருந்தும் கூடத்தை தகர உலோகத்தில் அமைத்திருப்பதால் அவர்கள் வெப்ப தாக்கத்தினால் சுகாதார கேடு ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. ஆகவே உடனடியாக இந்த கூடத்தை வெப்பம் பாதிக்காத வகையில் மாற்றி சீரமைத்து தருமாறு ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் நம்ம சென்னை இணையவழி புகார் தளத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது.

(2) மேலும் கடந்த 03–03–2026 அன்று மண்டலம்–14, வார்டு 188, மடிப்பாக்கம் பகுதி பொறியாளர் "Sir complaint location inspected. It is a PUF Sheet roofing. (Polyurethane Foam roofing) refers to a high-performance, three-layer insulated sandwich panel used for roofs, featuring a solid insulating foam core (PUF) between two metal sheets. It provides exceptional thermal insulation and keeping spaces cool. This is for your kind information." என்று பதிலளித்து எனது புகார் முடித்து வைக்கப்பட்டது.

(3) மேலும் மேற்படி அலுவலர் கொடுத்த பதிலில் அந்த உணவருந்தும் கூடத்தின் மேற்கூரை மட்டுமே வெப்பம் தாக்காத வகையில் வடிவமைப்பு செய்துள்ளதாக பதில் அளித்த காரணத்தால் கடந்த 03–03–2026 அன்று எனது தரப்பில் புகார் மீண்டும் மறுதிறவு செய்யப்பட்டது. அதில் மிகவும் தெளிவாக கூரை மட்டுமே வெப்பம் தாக்காத வகையில்

செய்யப்பட்டது. அதில் மிகவும் தெளிவாக கூரை மட்டுமே வெப்பம் தாக்காத வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளதால் பக்கவாட்டில் உள்ள உலோகங்கள் தகரத்தால் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளதை ஒத்துக் கொண்டுள்ளீர்கள் என்றும், ஆகவே உடனடியாக வெப்பம் தாக்காத வகையில் பக்கவாட்டிலும் அதே உலோகத்தால் சீரமைத்து தரவேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது.

(4) மேலும் கடந்த 05–03–2026 அன்று எனது கோரிக்கையை பார்வையிட்ட கூடுதல் செயற்பொறியாளர் மண்டலம் 14 அதனை 188 பகுதி பொறியாளரின் பார்வைக்கு அனுப்பி "Forwarded To Assistant Engineer, Division 188, Inspect the above mention location and take necessary action" என்று நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்துள்ளார். ஆனால், அதன்பிறகு எனது புகார் குறித்து இதுநாள்வரை 100 நாட்கள் கடந்தும் ஒரு நடவடிக்கைகளும் எடுக்காத பொறுப்பற்ற நிலையும், கடமை மீறலும் சென்னை பெருநகர மாநகராட்சி நிர்வாகத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

(5) மேலும் இந்த கோரிக்கையின் புறக்கணிப்பால் சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குள் தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்ட உணவருந்தும் கூடம் அனைத்தும், மடிப்பாக்கம் 188–வது வார்டில் அமைக்கப்பட்டது போல தரமற்ற நிலையில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது. அதன் காரணமாகவே நான் அளித்த புகாருக்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தவிர்த்திருக்க வாய்ப்புகள் உள்ளது என்று கருதுகிறேன். ஆகவே, சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவருந்தும் கூடங்கள் அனைத்தினையும் ஆய்வுக்கு உட்படுத்தி வெப்பம் தாக்காத வகையில் அதனை சீரமைக்க உத்திரவிடுமாறு ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் வலியுறுத்தப்படுகிறது.

(6) மேலும் 100 நாட்கள் கடந்த பின்பும் நான் அளித்த புகாரில் தெரிவித்துள்ள சங்கதிகளுக்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் இருப்பது தூய்மை பணியாளர்களின் சுகாதார நலனில் அக்கறை செலுத்தாத மனநிலையை தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆகையால் தெரிந்தே தங்களின் கடமையை மீறி செயல்பட்டுள்ள அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்துகிறோம்.

ஆகையால் உடனடியாக தயவுகூர்ந்து சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 14, மடிப்பாக்கம் 188–வது வார்டில் அமைக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களின் உணவருந்தும் கூடத்தை வெப்பம் தாக்காத வகையில் சீரமைத்துதர தக்க உத்திரவிடுமாறும் மேலும் சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவருந்தும் கூடங்கள் அனைத்தினையும் ஆய்வுக்கு உட்படுத்தி வெப்பம் தாக்காத வகையில் அதனை சீரமைக்க ஆவண செய்யுமாறும், புகார் அளித்து 100 நாட்கள் கடந்தும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காத அலுவலர்கள் மீது முறைமன்ற நடுவச் சட்டத்தின்படி தக்க நடவடிக்கைகள் எடுக்க ஆவண செய்யும்படி தங்களை ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் பணிவுடன் வேண்டப்படுகிறது."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.07.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலர் தனது கடிதம் நாள் 30.07.2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மேற்கண்ட பொருள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில், பெருநகர சென்னை

பேருந்து நிலையத்தின் அருகே டாக்டர் அம்பேத்கர் சாலையில் தூய்மை பணியாளர்களுக்காக உணவருந்தும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உணவருந்தும் கூடத்தின் எதிரே மரங்களும், வலது புறத்தில் பல்நோக்கு கட்டிடம் மற்றும் இடது புறத்தில் கோட்டம்–187 அலுவலகம் உள்ளது. இவ்வாறு அதிக வெப்பம் இன்றி அமைந்துள்ள இடத்தில் உணவு அருந்தும் கூடம் மேற்கூரை PUF Sheet மற்றும் சுற்றுச் சுவர் GI Sheet கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இக்கட்டிடத்தின் மேம்பாட்டு பணியினை முறையான நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணியானது முடிக்கப்பட்டு தூய்மைப் பணியாளர்களின் பயன்பாட்டில் உள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகாரின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களிடம் ஆலோசனை செய்யப்பட்டது. இது குறித்து, தற்பொழுதுவரை எவ்வித புகார் மனுவும் தூய்மை பணியாளர்களிடமிருந்து பெறப்படவில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்டவாறு விவரங்கள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.''

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.09.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.08.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 02.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''கடந்த 01.03.2026 அன்று சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம் 14, மடிப்பாக்கம் 188வது வார்டு பகுதியில் அமைந்துள்ள தூய்மை பணியாளர்கள் உணவருந்தும் கூடத்தை தகர உலோகத்தில் அமைத்திருப்பதால் அவர்கள் வெப்ப தாக்கத்தினால் சுகாதார கேடு ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. ஆகவே உடனடியாக இந்த கூடத்தை வெப்பம் பாதிக்காத வகையில் மாற்றி சீரமைத்து தருமாறு ஆம் ஆத்மி கட்சியின் தமிழ்நாடு மாநில வழக்கறிஞர் அணி சார்பில் நம்ம சென்னை இணையவழி புகார் தளத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது.

03.03.2026 அன்று மண்டலம் 14, வார்டு 188, மடிப்பாக்கம் பகுதி பொறியாளரின் அறிக்கை :-

"Sir complaint location inspected. It is a PUF complaint location inspected. It is a PUF Sheet roofing. (Polyurethane Foam roofing) refers to a high-performance, three-layer insulated sandwich panel used for roofs, featuring a solid insulating foam core (PUF) between two metal sheets. It provides exceptional thermal insulation and keeping spaces cool. This is for your kind information." என்று பதிலளித்து எனது புகார் முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி அலுவலர் கொடுத்த பதிலில் அந்த உணவருந்தும் கூடத்தின் மேற்கூரை மட்டுமே வெப்பம் தாக்காத வகையில் வடிவமைப்பு செய்துள்ளதாக பதில் அளித்த காரணத்தால் கடந்த 03.03.2026 அன்று மீண்டும் அளித்த எனது புகாரில் உடனடியாக வெப்பம் தாக்காத வகையில் பக்கவாட்டிலும் அதே உலோகத்தால் சீரமைத்து தரவேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது.

கடந்த 05.03.2026 அன்று மீண்டும் புகார் அளித்தேன். அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காததினால் சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குள் தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்ட உணவருந்தும் கூடம் அனைத்தும், மடிப்பாக்கம் 188–வது வார்டில் அமைக்கப்பட்டது போல தரமற்ற நிலையில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது. அதன் காரணமாகவே நான் அளித்த புகாருக்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தவிர்த்திருக்க வாய்ப்புகள் உள்ளது என்று கருதுகிறேன்.

ஆகவே, சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவருந்தும் கூடங்கள் அனைத்தினையும் ஆய்வுக்கு உட்படுத்தி வெப்பம் தாக்காத வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு எண்.188ல் தூய்மை பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மேற்கூரை PUF Sheet Roofing அமைத்தவாறு பக்கவாட்டிலும் அவ்வாறு அமைக்குமாறும், அதைபோல் தூய்மை பணியாளர்களுக்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் உள்ள 200 வார்டுகளில் உள்ள உணவக அறையின் கட்டிடத்திற்கு மேற்கூரை மட்டுமில்லாமல் பக்கவாட்டிலும் அமைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மேற்கண்ட கோரிக்கை தொடர்பாக 03.03.2026 அன்று அளித்த மனுவிற்கு 100 நாட்களுக்கு மேலாகியும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் இளநிலைப் பொறியாளர் 02.09.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, பகுதி 42, கோட்டம் 188 பகுதிக்கு உட்பட்ட மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தின் அருகே டாக்டர் அம்பேத்கர் சாலையில் தூய்மை பணியாளர்களுக்காக உணவருந்தும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது இந்த உணவருந்தும் கூடத்தின் எதிரே மரங்களும், வலது புறத்தில் பல்நோக்கு கட்டிடம் மற்றும் இடது புறத்தில் கோட்டம் 187 அலுவலகம் உள்ளது. இவ்வாறு அதிக வெப்பம் இன்றி அமைந்துள்ள இடத்தில் உணவு அருந்தும் கூடம் மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டில் உள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள புகாரின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களிடம் ஆலோசனை செய்யப்பட்டது. இது குறித்து, தற்பொழுது வரை எவ்வித புகார் மனுவும் தூய்மை பணியாளர்களிடமிருந்து பெறப்படவில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனுதாரர் கோரியவாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் உள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவக கட்டிடத்தின் சுற்றுசுவர் PUF Sheet அமைப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்தில் ஒப்புதல் பெறப்பட்டப்பின்னர் அது தொடர்பான உரிய நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்படும் தூய்மை பணியாளர்களுக்கான உணவருந்தும் கூடம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, மடிப்பாக்கம் 188வது வார்டு பகுதியில் அமைந்துள்ள தூய்மை பணியாளர்கள் உணவருந்தும் கூடத்தை தகர உலோகத்தில் அமைத்திருப்பதால், மேற்கண்ட பணியாளர்களுக்கு வெப்பத்தினால் சுகாதார கேடு ஏற்படும் என்பதால், அக்கூடத்தை சீரமைத்து வெப்பம் பாதிக்காத வகையில் உடனடியாக மாற்றி தருமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ல் மனு அளித்ததற்கு, மேற்கண்ட தூய்மை பணியாளர்களுக்கான உணவருந்தும் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள PUF (Polyurethane Foam roofing) ஷீட் கூரையானது உயர்செயல் திறன் மிக்க, மூன்று அடுக்கு காப்பு கொண்ட 'சாண்ட்விச் பேனல்' (sanwich panel) வகையைச் சார்ந்ததால், சிறந்த வெப்பத் தடுப்புத் திறனை வழங்குவதோடு, உட்புற இடங்களைக் குளிர்ச்சியாக வைத்திருக்கவும் உதவுகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் பகுதி பொறியாளர் பதில் தெரிவித்துள்ளார் என்பதும், மேற்படி அலுவலர் கொடுத்த பதிலில் அந்த உணவருந்தும் கூடத்தின் மேற்கூரை மட்டுமே வெப்பம் தாக்காத வகையில் வடிவமைப்பு செய்துள்ளதாக பதில் அளித்து உள்ளதால், வெப்பம் தாக்காத வகையில் பக்கவாட்டிலும் அதே உலோகத்தால் சீரமைத்து தரவேண்டி மீண்டும் மனு அளிக்கப்பட்டும் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், ஆகவே, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவருந்தும் கூடங்கள் அனைத்தினையும் ஆய்வுக்கு உட்படுத்தி வெப்பம் தாக்காத வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு எண்.188ல் தூய்மை பணியாளர்களுக்காக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மேற்கூரை PUF Sheet Roofing அமைத்தவாறு பக்கவாட்டிலும் அமைக்குமாறும், அதைபோல் தூய்மை பணியாளர்களுக்கான பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளில் உள்ள உணவக அறையின் கட்டிடத்திற்கு மேற்கூரை மட்டுமில்லாமல் பக்கவாட்டிலும் அமைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, பகுதி 42, கோட்டம் 188 பகுதிக்கு உட்பட்ட மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தின் அருகே டாக்டர் அம்பேத்கர் சாலையில் தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவருந்தும் கூடத்தின் எதிரே மரங்களும், வலது புறத்தில் பல்நோக்கு கட்டிடம் மற்றும் இடது புறத்தில் கோட்டம் 187 அலுவலகம் உள்ளது என்பதும், இவ்வாறு அதிக வெப்பம் இன்றி அமைந்துள்ள இடத்தில் உணவு அருந்தும் கூடம் மேற்கூரை PUF Sheet மற்றும் சுற்றுச் சுவர் GI Sheet கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதும், தூய்மை பணியாளர்களிடம் ஆலோசனை செய்யப்பட்டதில், தற்பொழுது வரை எவ்வித புகார் மனுவும் தூய்மை பணியாளர்களிடமிருந்து பெறப்படவில்லை என்பதும், இருப்பினும், மனுதாரர் கோரியவாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் உள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவாக கட்டிடத்தின் சுற்றுசுவர் PUF Sheet அமைப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்தில் ஒப்புதல் பெறப்பட்டப்பின்னர் அது தொடர்பான உரிய நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்படும் தூய்மை பணியாளர்களுக்கான உணவருந்தும் கூடம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் என்பதும், எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, பகுதி 42, கோட்டம் 188 பகுதிக்கு உட்பட்ட மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தின் அருகே டாக்டர்

அம்பேத்கர் சாலையில் தூய்மை பணியாளர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள உணவருந்தும் கூடமானது அதிக வெப்பம் இன்றி அமைந்துள்ள இடத்தில் உணவு அருந்தும் கூடம் மேற்கூரை மற்றும் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு தூய்மை பணியாளர்களின் பயன்பாட்டில் உள்ளது என்றும், மனுதாரர் கோரியவாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் உள்ள தூய்மை பணியாளர்களுக்கான உணவருந்தும் கூடத்தின் மேற்கூரையில் அமைத்தவாறு சுற்றுச் சுவருக்கும் PUF Sheet அமைப்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்தில் ஒப்புதல் பெறப்பட்டப்பின்னர் அது தொடர்பான உரிய நடவடிக்கை, எதிர்வரும் காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்படும் தூய்மை பணியாளர்களுக்கான உணவருந்தும் கூடம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் இளநிலைப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாலும், மனுதாரரின் கோரிக்கையானது தூய்மை பணியாளர்களின் நலனை பற்றியது என்பதனை கருத்திற்கொண்டு, விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G.M.சங்கர்,
கதவு எண்.57B,
லஷ்மி நகர் மெயின் ரோடு,
மடிப்பாக்கம், சென்னை–600 091.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 6/64, புழுதிவாக்கம் மெயின் சாலை,
மடிப்பாக்கம், சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல் :
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

16/10/26
செயலாளர்.